தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 23, சித்ரபானு-திருவள்ளுவர் ஆண்டு 2033

2002 மே 6, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

நோயின் தன்மை, நோய்க்கான காரணம், நோயைத் தீர்க்கும் வழி ஆகியவற்றை முறையாக ஆராய்ந்து சிகிச்சை செய்ய வேண்டும். உடல் நோய்க்கு மட்டுமின்றிச் சமுதாய நோய்க்கும் இது பொருந்தும்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. இரங்கற் குறிப்பு

முன்னாள் அமைச்சர் திருமதி லூர்தம்மாள் சைமன் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழக முன்னாள் அமைச்சரும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மூத்த முன்னாள் உறுப்பினரும், சிறந்த காந்தியவாதியுமான திருமதி லூர்தம்மாள் சைமன் அவர்கள் தனது 92-வது வயதில் 4-5-2002 அன்று மறைவுற்றதை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி லூர்தம்மாள் சைமன் அவர்கள் 1957 முதல் 1962 வரை குளச்சல் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும், உள்ளாட்சித் துறை

அமைச்சராகவும் சீரிய முறையில் பணியாற்றியுள்ளார். இம்முன்னாள் உறுப்பினரின் மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன். அன்னாருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வாணியம்பாடி, காவல் நிலையத்தின் எல்லைக்கு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. இல்லை. இன்றைக்குத்தான் கொடுத்திருக்கிறீர்கள். உடனேயா? நாளைக்கு காலையில் அறைக்கு வாருங்கள். என்னவென்று பார்க்கிறேன். (குறுக்கீடு)

பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த.....

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்களும் கொடுத்திருக்கிறீர்கள். இன்றைக்குத்தானே கொடுத்திருக்கிறீர்கள். என்னவென்று பார்த்துச் சொல்கிறேன். நாளைக்கு அறைக்கு வாருங்கள். (குறுக்கீடு) பொன்முடி சொல்லுங்கள்.

டாக்டர் க. பொன்முடி: சட்டமன்ற அலுவலகம் தாக்கப்பட்டது குறித்து..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, கொடுத்திருக்கிறீர்கள். நாளைக்கு அறைக்கு வாருங்கள், பேசுவோம், பேசுவோம்.

***திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. அறைக்கு வாருங்கள் பேசுவோம். நல்ல டீ வாங்கித் தருகிறேன். பேசுவோம்.